JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.254/2019
PW.8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகத்தாய் | தாலுகா | கடையநல்லூர் |
| கணவர் பெயர் | கருப்பசாமி | தொழில் | கூலிவேலை |
| கிராமம் | சொக்கம்பட்டி காலனி | வயது | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சொக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். எதிரி சிவா என்பவரை தெரியாது. அ.சா.1 கார்த்திக், அ.சா.2 ராஜா, அ.சா.3 முத்துப்பாண்டியன், அ.சா.4 வேலம்மாள், அ.சா.5 விமலாதேவி, அ.சா.6 சுகன்யா, அ.சா.7 சுவேதா ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்துபோன சுப்பிரமணிய பாரதியார் என்பவரை தெரியும். எங்கள் வீட்டு பக்கத்து வீட்டுக்காரர். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 2017ம் வருடம் காலை 10.00– 10.30 மணியளவில் காய்கறிகள் வாங்குவதற்காக கடையநல்லூர் செல்வதற்கு சொக்கம்பட்டியிலிருந்து ஆட்டோவில் நானும் என் மகளும் ஏறினோம். ஆட்டோவில் 10 நபர்கள் இருந்தார்கள். ஆட்டோ ஓட்டுநர் மதுபோதையில் இருந்தார். அவர் போன் பேசிக் கொண்டே வேகமாக வந்ததில் மரத்தின் மீது மோதியது. எனக்கு காதில் அடிபட்டது. அதன் காரணமாக எனக்கு காது தற்போது வரை கேட்கவில்லை. ஆட்டோ ஓட்டுநர் ஓடிவிட்டார். கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் சென்றோம். பின்பு அங்கிருந்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆட்டோவை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 24.08.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் இந்த வழக்கின் எதிரி தன்னுடைய ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.254/2019
PW.7

| பெயர் | சுவேதா | தாலுகா | கடையநல்லூர் |
|---|---|---|---|
| கணவர் பெயர் | ராஜேஸ்குமார் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | சொக்கம்பட்டி | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது சொக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எதிரி சிவா என்பவரை தெரியாது. அ.சா.1 கார்த்திக், அ.சா.2 ராஜா, அ.சா.3 முத்துப்பாண்டியன், அ.சா.4 வேலம்மாள், அ.சா.5 விமலாதேவி, அ.சா.6 சுகன்யா ஆகியோர்களை தெரியாது. வழக்கில் இறந்துபோன சுப்பிரமணிய பாரதியார் என்பவரை தெரியும். எங்கள் வீட்டு பக்கத்து வீட்டுக்காரர். 2017 ம் வருடம் 24 ம் தேதி மாதம் நினைவில் இல்லை. காலை 10 –11 மணி இருக்கும். நான் சொக்கம்பட்டி பேருந்து நிலையத்தில் வைத்து ஆட்டோ வந்தது. ஆட்டோவில் நிறைய பேர்கள் இருந்தார்கள். நானும் என் அம்மாவும் ஆட்டோவில் கடையநல்லூருக்கு செல்ல ஏறினோம். ஒரு வளைவில் மரத்திற்கு கீழ் இளநீர் கடை போட்டிருந்தார்கள். ஆட்டோ ஓட்டுநர் குடித்திருந்தார். அவர் ஒரு கையில் ஆட்டோவை ஓட்டி மற்றொரு கையில் போன் பேசிக்கொண்டு ஆட்டோவை ஓட்டினார். ஆட்டோவிற்குள் இருந்த நாங்கள் ஓட்டுநரிடம் குழந்தைகள் ஆட்டோவிற்குள் இருக்கிறார்கள் போன் பேசாதீர்கள் என கூறினோம். நாங்கள் கூறியதும், ஆட்டோவை மரத்தில் இடித்துவிட்டு ஓட்டுநர் ஓடிவிட்டார். அதில் சில நபர்கள் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். என் அம்மாவிற்கு காதில் காயம் ஏற்பட்டது. எனக்கு இடுப்பிலும், தொடையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. ஆம்புலன்ஸ் மூலம் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கிருந்து

மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆட்டோவை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. எனக்கு காயம் ஏற்பட்டதற்கு ஆட்டோவின் ஓட்டுநர் தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலிசார் விசாரணையின் போது கடந்த 24.08.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் இந்த வழக்கின் எதிரி தன்னுடைய ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது எதிரிக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi